குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 12 — 5 — 59 செவ்வாய் | இசை: 49

தமிழுக்கு உயிர் அளித்தான்

ஆட்டு மந்தையிற் காட்டுப்புலி
பாய்ந் தாற்போல் - என்
அன்புடையான் களம் புகுந்தான்
வா தோழி
பாட்டுப் பெற்றுன உயர்ந்த
சா வாலே - அவன்
பழியைப் பெற்றுன இழிந்த
வாழ் வாலே
நாட்டின் புறப் போர்க்களமே
வா தோழி - நீ
நம்தமிழர் இனப் பெருமை
பார் தோழி
கேட்டதுபார் போர் முழக்கம்!
வா தோழி - பார்
கிழிந்ததுவே வானவெளி
வா தோழி!

செங்குருதி ஓடையிலே
யா னைகள்
செத்தபடி மிதப்பனவும்
பார் தோழி
எங்கணுமே தேர்குதிரை
கா லாட்கள்
இறந்தனபார் இறந்தனர்பார்
என் தோழி!

தங்கம் நிகர் ஒருடம்பு
வான் நோக்கிப் - பார்
தரைக் கழகு செய்வதனைப்
பார் தோழி
சிங்கமடி செந்தமிழன்
என் காதல்
செல்வமடி செத்துவிட்டான்
பார் தோழி!

முன்மார்பில் உடலெல்லாம்
வேல் தாங்கி - அவன்
முள்ளம்பன்றி போற்கிடந்தான்
பார் பார் பார்
என்மார்பு தழுவியவன்
போர் மாதின் - நல்
இளமார்பு தழுவிய பின்
புகழ் மாதின்
பொன்மார்பு தழுவுகின்றுன்
பார் தோழி!
புதியசுவை எனக்களித்தான்
பார் மீதில்
என் ஆசைத் தமிழ்காத்தான்
கா ணேடி - என்
எழிற்றமிழுக் குயிர் அளித்தான்
சீர் வாழ்க!

★ ★ ★ ★ ★

ஏனங்குடி

ம. சம்பந்தம் அறிக்கை.

இந்த நாட்டில் எங்கள் கட்சிதான்
முதன்மை உடைய தென்று மொழிந்து
கடமை கண்ணியம் கட்டுப் பாடெனும்
சொல்வலை வீசித் தூய தமிழக
மக்கள் தமிழையும் மாணவர் தம்மையும்
மயக்கிக் கூத்தியர் மடியில் சாய்த்து
நாட்டில் தீமை நாட்டு கின்றனர்;
மானம் அழிப்பார்; வீரம் மாய்ப்பார்.
கடிவர் பண்பினைக் கண்ணீர்த் துளிகள்!

★ ★

உண்மையும் நேர்மையும் ஒழிவன அல்ல
இந்நாள் வரைக்கும் அவருடன் இருந்தநான்
உண்மை உணர்ந்து வருந்து கின்றேன்

★ ★

தந்தை பெரியார் ஒருவரே தன்னலம்
எண்ணு துழைப்பவர், தண்முகில் போல!
அவரடி பற்றினேன்! தமிழர்
ஏவர்க்கும் யான்தரும் அறிக்கை யீதே!

ஏமாறுதே!

எலிஏ மாந்தால் எறும்பும் கொல்லும்
புலிஏ மாந்தால் பன்றியும் புறட்டும்,
யானைஏ மாந்தால் எறும்பும் நலிசெயும்;
மானே மாந்தால் நரியும் மடிக்கும்!
தாய்கம் ஏமாந்தது - ஆரியத்
தீயர் உயர்நிலை சிதைத்தார் அன்றே!

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ சித்திரை ௨௯

அவர்களைப் பாருங்கள்!

தமிழகம் ஒரு கப்பல்; தமிழ் அதில் நிறைந்த தலைச்சரக்கு!

கப்பல் கவிழ்க்கப் படுகின்றது. தமிழ் மூழ்கடிக்கப் படுகின்றது.

என்ன ஆகும்? தமிழன் செத்தான்!

இந்த நிலையில் கப்பலிலுள்ளவர்கள் கல்வியறிவு நிறைந்த தமிழ்த் தலைவர்கள், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாகாது.

வாழ்வது சாவது என்ற இரண்டிற்கும் ஒட்டி ஒருகை பார்க்க வேண்டிய நேரம். ஓடுகின்றார். ஆடுகின்றார்; பதைக்கின்றார், எதிர்க்கின்றார் ஒரே ஒரு முதியவர். உடனே உடனேடித் தோள் கொடுக்கவேண்டியது தமிழர் தலைவர் கடன். கற்றறிந்தார் கடன் புகழ் என்பது பணம் தேடுவதால் ஏற்படுவதில்லை. புகழ் என்பது எழுதுவதால் பேசுவதால் ஏற்படுவதில்லை. அடிமை நிலைக்குப் பரிந்து போராடும் போராட்டத்தில் பங்கு கொள்வதால் - வெற்றி பெறச் செய்வதால் ஏற்படுவது.

சாகும் தாய்மொழியைச் சாக்காட்டிற் செலுத்துவானும், வேகும் தமிழகத்தை வேக்காட்டிற் செலுத்துவானும் பழியைச் சுமப்பானன்றிப் புகழை அடையமாட்டார்.

"புகழ்" - என்றும் இருப்பது. அதைத் தேடத்தான் வேண்டும். தேடாமல் இருக்க முடியாது. புகழ்தேடல் உயிரின் இயற்கை. அதை வெறுப்பவன் இருக்கலாம். எப்போது வெறுக்கின்றான்? உயிரை வெறுக்கும்போது!

இந்நாள் உலகப் புகழ் பெற்ற ஏ. இராமசாமி, ஏ. இலக்குமணசாமி, டாக்டர் கிருட்டினசாமி, மணவாள இராமாநுசம், இரத்தினசாமி, எஸ். இராமநாதன். கே. எம் பாலசுப்பிரமணியன், நீதிபதி சோமசுந்தரம் நீதிபதி கணபதி, நீதிபதி நாடார், ஜி. டி. நாயடு வி. எல். எத்திராசலு கலைக்கதிர் இராம கிருட்டினன், கருமுத்து தியாகராசன், முதல்வர் காமராசர், அமைச்சர் சுப்பிரமணியம் அமைச்சர் பத்தவச்சலம் அமைச்சர் இராமையா, ஓமந்தூர் இராமசாமி, கசபதி - இந்தத் தூங்கும் புலிகள் எழுந்தால் ஏங்கும் நம் தாய் இன்பம் எய்த மாட்டாளா? துன்பம் தொலைக்க மாட்டாளா?

அவர்களைப்பாருங்கள்! "சமஸ்கிருதவிசுவ பரீஷத்" காணுகின்றார்கள் செத்துப் போன சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கவும் உயிரோடிருக்கும் தமிழை ஒழித்துக்கட்டவும் பெரு முயற்சி கொள்ளுகின்றார்கள்.

யார் யார்?

பத்மநாப தாச பலராமவர்மா
பாபு புருஷோத்த தாஸ்தாண்டன்
கே. எம். முன்ஷி
டாக்டர் இராசேந்திரப் பிரசாத்
சேம் சாகிபு
எச். இ. திவேதியா
நீதிபதி, என். எச். பகவதி
பிக்கு ஜினாத்ஜி
உமேஸ் மிச்ரா
ஆச்சாரிய டி. ஏ. வி. தீக்ஷிதர்

மற்றும் பலர்

அரசரும் அதிகாரத்தாரும் செல்வரும் தம் மொழிக்கு உயிர் விடுகின்றார்கள் உழைக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட அறிஞர்கள், அதிகாரத்தாரும் நம்மிடம் இருக்கின்றார்கள். உலகப் புகழ் பெற்று உயர்ந்தாரும் இருக்கின்றார்கள்.

தமிழின் பேரால் தமிழகத்தின் பேரால் ஒருநாள் ஒருதரம் அவர்கள் கூடியதுண்டா?

★ ★ ★

பெரியார் செய்த பெருந்தவறு

மங்களமாணிக்கம், அண்ணுமலைநகர்

உலகப் பேரறிஞர்கள் மக்களிடையே அடிக்கடி தோன்றுவதில்லை. புத்தர், ஏசு, நபிகள் நாயகம் ஆகியோர் வாழ்ந்த நெடுங்காலத்திற்குப்பின் இன்றைய இருபதாம் நூற்ருண்டில் ஈ. வே. ராமசாமி என்ற ஒரு 'பெரியார்' தோன்றிச் சமுதாய சீர்திருத்தத்தைப் பகுத்தறிவுப் பிரசாரத்தின் மூலம் பல ஆண்டுகளாய்ச் சாதித்து, நம் நாட்டில் சாதிகள், மதங்கள், கடவுள்கள், அரசியல், பொருளாதாரம் பற்றி எண்ணற்ற கருத்துக்களை வழங்கி வருகிருர்கள். அவைகள் இன்று வாழும் மர மண்டைத் தமிழர்கள் மண்டையில் பதியாவிட்டாலும் 'நாளை' அவைகளைப் பொன்மொழிகள் என போற்றுவர் – அந்தநாள் வரத்தான் போகிறது.

இாண்டாண்டுகாலமாகப் பெரியார் அவர்கள் எழுத்தும் பேச்சும் ஜனநாயகம் என்ற அரசியலமைப்பு பற்றியதாக அதிகம் காணப்படுகிறது.

''இந்தியா உலக ஜனநாயக நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது'' என பண்டிதர் நேரு முதல் ஒரு சாதாரண காங்கிரஸ் தொண்டன் வரை அல்லது, ஜனநாயகத்தில் திடீர் என்று பற்றுக்கொண்ட இந்திய 'காம்ரேட்களும்' திராவிட நாட்டுக் 'கண்ணீர்த்துளிகளும்' ஒரே ஜனநாயக பல்லவி பாடுகின்ற நேரத்தில் "ஜனநாயகம் என்பது ஓர் பேய். கட்சி, தேர்தல், மெஜாரிட்டி, ஜனநாயகம் என்பதெல்லாம் கூட்டுக்கொள்ளை மாதிரி அராசகம் நடைபெறத்தான் இடமளிக்கும்'' என்று நாள்தோறும் பட்டி தொட்டிகள் எல்லாம் முழங்குகிருர்.

தமிழக மக்கள் யாவரும் அறிவர் பெரியார் அவர்கள் எந்தக் கருத்தைக் கூறினுலும் அது ஒரு நோய்தீர்க்கும் மருந்து என்று – ஓர் அனுபவம் முதிர்ந்த மருத்துவன் நோய்கண்டு மருந்து தருவதுபோல் - பெரியார் அவர்கள் தனது நாற்பது ஆண்டு உலக அனுபவத்தினுல் தானுகவே சிந்தித்து எக்கருத்தையும் யாருக்கும் அஞ்சாது வெளியிடுவார்கள். அக்கருத்து சமுதாயத்தில் ஏற்படும் நோயைத் தீர்க்கும் மாமருந்தாகும் அதனுலேயன்ரே நம்பாவேந்தர் பாரதிதாசனுர் அவர்கள் '' உயர் எண்ணங்கள் மலரும் சோலை'' என்றதோர் இலக்கணத்தை வகுத்தார் பெரியார் அவர்கட்கு.

அங்ஙனம் பெரியார் அவர்கள் தமிழக மக்கட்கு அளித்த மருந்தில் குணமாகிய நோய்கள்பல. ஆரிய மத மூடநம்பிக்கையில் மூழ்கி தமிழன் என்ற உணர்ச்சியற்ற மக்கள் ''கொலைவாளினை எடடா மிக கொடியோர் செயல் அறவே'' என்று உணர்ச்சி பெற்றது - செத்த மொழியாம் சமஸ்கிருதம் போற்றி, அன்னை மொழியாம் தமிழ் மொழியை மறந்து துதிபாடியவர்கள்; ''தாய்மொழியைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்'' என்று வீறு கொண்டு போர்க்கெழும்பியது; 'எல்லோரும் ஓரினம்' என்று வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களை, எண்ணற்ற சாதிகளாகப் பிரித்து, அவர்களிடையே ஒற்றுமையின்மையும், பகைமையுணர்ச்சியையும் ஊட்டி, அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைகளாக்கிய ஆரியமதம் புராண சாஸ்த்திரக் குப்பைகளையும் அதற்கு ஆதரவு தரும் அரசியல் சட்டத்தையும் எரித்து' அப் பார்ப்பர்களையும் ஒழிக்க போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருப்பது. இவையெல்லாம் அம் 'முதிர்ந்த மருத்துவர்' தந்த மருந்தின் பலன்கள்.

அதுபோலவே, ஜனநாயகம் என்ற நோயின் கொடுமையினைக்கண்டு மனம்நொந்து கூறுகிருர். ஆனுல் அதைத் தீர்க்க யாரும் முன் வாரார். காரணம் ஜனநாயகம் என்ற பித்தம் தலைக்கேறியவர்களாகிவிட்டனர்–பித்தம் பிடித்தவர்கள் மருத்துவரையும், மருந்தையும் தேடிச் செல்லமாட்டார்கள்.

''ஜனநாயகம் என்பது மக்களின் நல்வாழ்விற்காக, மக்களாலே ஆளப்படும் ஓர் ஆட்சி முறை. இம்முறையில் மக்கள் அனைவரும்

சம அந்தஸ்தும், சம வாய்ப்பும் பெறுவார்கள்.'' ஆனால் நம் நாட்டு ஜனநாயக முறை முற்றிலும் மாருனதாக இருக்கிறது. பெரும் மக்கள் தொகை உள்ள நாட்டில், மக்கள் பிரதிநிதிகளால்தான் இம்முறை பின்பற்ற முடியும் அதுபோல் நம்நாட்டில் மக்கள் மன்றத்திற்கு 'ஓட்டு' முறையால். (Ballot-box Systam) ஓட்டு அளிப்பவரும், ஓட்டு பெறுபவரும் ஒழுக்கம் உடையவர்கள் எனத்துணிந்து கூறமுடியவில்லை. இதை, நாம் கண்கூடாகக் கண்டோம் கடந்த இரண்டு பொதுத்தேர்தல்களில்! அண்மையில் தேர்வுக் குழுத்தலைவரின் அறிக்கை நமக்கு நல்ல ஒரு சான்ருகும்.

மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் பெரும்பாலும் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். மன்றத்தில் ஒரு பொருள் பற்றி விவாதிக்க அம்மன்றத் தலைவர் மணியடித்ததும் அங்கத்தினர் வருவதில்லை என்றும், சில நேரங்களில் மந்திரிகளும் வருவதில்லை என்றும் எத்தனையோ குக்கிராமங்கள் போக்கு வரத்துமின்றி அவதியுறும் நிலையில் இருக்கும்போது 'விமானத்தில் செல்ல உரிமை' பெறப் போராடுகின்றனர் என்றும், தனக்களித்த வீடுகளை வாடகைக்குவிட்டுப்பணம்தேடுகின்றனர் என்ற செய்திகளைக் காணும்தோறும் இவர்களைப் பொது நோக்குடையவர்கள் என எண்ண எப்படி மனந்துணியும்? பெரியார் அவர்கள் கூறுவதுபோல் ''முட்டாள்களால் தேர்ந்தெடுக்கப்படும்மடையர்கள்''என்று தானே எண்ணத்தோன்றும்.

நமக்குள் சண்டை ஏன்?

சிட்டுக் குருவிக்கும்
சிட்டுக் குருவிக்கும் சண்டை!
சிச்சி புச்சியென்று
கொத்தக் கிழிந்தது மண்டை!

பட்டுப் படாலென்று
எட்டிஅ டித்தஇ றக்கை,
பட்டுப் பட்டாகப்
பறந்தது வீட்டைம றைக்க(த்)

தட்டிஇ டுக்கிற்பு
ரட்டிய தேஒரு குருவி
ஓட்டிஎ ழுந்துக
டித்தது மற்றொரு குருவி

தட்டிக்கொண் டுபோக
வந்தது காக்கைக் கூட்டம்
சண்டையை விட்டேஇ
ரண்டும் எடுத்தன ஓட்டம்!

மக்கட்குச் சம வாய்ப்பு, சம அந்தஸ்த்து என்பவைகள் ஏட்டளவிலேதான் உள்ளன, தாங்கள் உயர்சாதி என்றும், திறமையுடையவர்கள் என்றும் கருதும் பார்ப்பனர்கள் எல்லாத் துறைகளிலும் ஏகபோக உரிமை பெற்றிருக்கின்றனர் என்பதைத் தமிழர்களின் நல்வாழ்விற்கே என வெளிவரும் விடுதலை நாளிதழைத் தொடர்ந்து படிக்கும் தமிழக மக்களும் மாணவர்களும் நன்கு அறிவர்.

இம்மாதிரி ஜனநாயகம் என்ற போலி வேடத்தில் நடக்கும் அராசகச் செயல்கள் அனைத்தும் அன்ருடம் அசைக்கமுடியாத ஆதாரங்களுடன் மக்களுக்கு எடுத்துக்காட்டிவருகிருர்கள் பெரியார் அவர்கள். அதைக்கேளாது ஜனநாயகம் என்ற 'பண நாயக', சாதி நாயக ஆட்சி முறையை முன்பு ''சட்டசபை மேஞமினுக்கிகளின் கூடம்'' என்று இகழ்ந்து, இப்போது மக்கள் குறைகளை உலகுக்கு எடுத்துச் சொல்லும் 'ஜனநாயகப் பூங்கா' எனப்புகழ்ந்து, பணத்திற்காகவும், பதவிக்காகவும் எதையும் செய்பவர்கள் பின்செல்லும் நன்றி கெட்ட தமிழர்களிடையே பெரியார் அவர்கள் பிறந்தது -பெரியார் அவர்கள் செய்த பெரும் தவருகும்.

<★>

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

சென்ற குயிலிதழில், சாரீரவீணை பற்றிய விளக்கம் நீண்டுவிட்டது என்று படிப்போர் எண்ணியிருப்பார்கள். அப்படி அன்று!

சமஸ்கிருதத்தினின்றே தமிழ் வந்தது, சமஸ்கிருதச் சொல் இல்லாத தமிழ் நூலே கிடையாது என்றும் பலவாறு புளுகும் புளுகுக்குட்டையில் விழாத தமிழர்கள் இல்லை எனுமபடி இருக்கிறது நிலைமை!

அவர்களை - அப்படிப்பட்ட தமிழர்களைத் 'தமிழின்றேல் ஆரியமில்லை'' என்னும் அறிவுக் கரையேற்றுவது பெருந் தொல்லை தருவதாய் உள்ளது.

சென்ற குயிலிதழில் சாரீர வீணை விளக்கத்தால், தமிழ்ச் சொல்லை வடசொல்லாக்கும் முடிச்சுமாறித்தனத்தில் எத்தனை பார்ப்பனர்கள் எவ்வளவு சுருசுருப்பாய் வேலைசெய்கின்றார்கள் என்பதைக் காட்ட முடிந்தது. குரல்வினை சாரீரவீணை ஆயிற்று. அவ்வளவு இடம் கிடைத்தால் போதாதா? வினையை வீணையாக்கி விட்டார்கள்.

இதுபோலத்தானே எல்லாம்?

பிச்சை எடுக்கவந்தவன் கச்சையில் இலக்கம் பொன்னிருந்தது என்றால் எவர் ஒப்புவார்? தமிழகத்தில் ஏதுங்கெட்டுப் புகுந்த ஓர் லம்பாடிக் கூட்டத்திற்கு இலக்கியமும் ஒரு கேடா? மொழியும் ஒருகேடா - அவர்கள் சொல்வதைக்கேளுங்கள்; எங்கள் சமஸ்கிருதத்தினின்றுதான் தமிழ் வந்தது. இதை நம்பலாமா தமிழர்கள்? பல்காலும் புளுகினால் இல்லதை உண்டு என்று ஆக்கினான் கோயபல்ஸ் என்பர்; அவர் அறியார். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னமே இந்தப் பாழான நாட்டில் நிறையக் கோயபல்சுகள் இருந்தார்கள்-இருக்கின்றார்கள்.

தூரம்

இது ந்தூர என்னும் வடசொல்லின் சிதைவென்று கூறுவர் வடவர். உளுதி சூத்திரகாரர் இது "இ" என்னும் அடியினின்று பிறந்ததென்று கூறிப் பிழைத்தார். உண்மையில் அது துலை என்ற நம் தமிழடியையே அடியாகக் கொண்டு தோன்றிய தூய தமிழ்க் காரணப் பெயர் சேய்மையைக் குறிப்பது. விரிவைச் சென்ற குயிலிதழ்த் தலையங்கத்தில் காண்க.

காட்டம்

இது காஷ்டம் என்றவடசொற் சிதைவென்பர். காட்டம் விறகுக்குப் பெயர். காட்டுப் பொருள் காட்டம் எனக்காரணங் காண்க. இதன் வேர்ச்சொல் காடு என்பது. இது போலவே-

கோட்டம்

என்பது கோஷ்டம் என்ற வடசொற் சிதைவென்பர். கோளுதல் கோடுதல் கோட்டம் அனைத்தும் ஒரே அடியிற்பிறந்த தூய தமிழ்க் காரணப் பெயர்கள் கொட்டம் என்பது இதைச்சார்ந்ததே.

<★>

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

கடவுள்

... நான் கடவுளுக்கு நன்றி செலுத்துவதில்லை, ஏனெனில் நான் கடவுள் நம்பிக்கையற்றவன் மேலும் கடவுள் என்ற ஒன்று இல்லவே இல்லை என்பவன்.

—ஜி. டி. நாயுடு.

(பேச்சுக்களிலிருந்து)

நடிப்பும் - நாடகமும்

திருவாரூர் கே. தங்கராசு

பெரிய கண்ணீர்த்துளியார்

சிறிய காஞ்சிபுரம்.

சென்னை
12 - 5 - 59

"அல்லலை நோக்கி அறிவோடிருப்போர்க்குப்
பல்லக்கு ஏதுக்கடி - குதம்பாய்!
பல்லக்கு ஏதுக்கடி!"

அறிவரசே!

பாடலைப்படித்துவிட்டு அடியேன்மீது ஆத்திரப் படாதீர்கள்!

கதையெழுதுவதாகச் சொல்லியவன் இப்படிப் பாடல் புனைந்திருக்கிருனே என்று வருந்தாதீர்கள்!

பாடல் என்ருலும் பரவாயில்லையே, மெத்தப் பிடிக்குமே எனக்கு. அந்த நாளில் புதுவைக்கவிஞர் மேல் நான் காதல் கொண்டதற்கு முழுமுதற் காரணம் பாடல்கள்தானே;

"அருக்கு மங்கையர் என்ற அடியில் ஆரம்பித்துப் படிப்படியாக மேலே செல்லும் திருப்புகழ் பாடல்களிலிருந்து, புரட்சிப்பாவேந்தரின் போர் முரசம் வரையிலே கரைத்துக் குடித்து, இடத்துக்கும் சமயத்துக்கும் ஏற்ப எடுத்தாண்டு எழுத்துலகில் "இணையற்றவன் நான்" என்ற பெயரை இந்த நாட்டு 'இளைஞர்களிடம்' சம்பாதித்தவனுயிற்றே அந்நாளில்"

எனக்கு எழுதவேண்டுமானுல் பாடல்களா இல்லை இந்தப் பயலுக்கு! நானும் எனது கட்சியும்—கட்சிக்குள்ளே புகுந்துகொண்டு கிடக்கும் தம்பிமார்கள் பட்டாளமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இற்றை நாளில் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவுஞ் சேர்ந்து ஆங்காங்கே அடைந்துவரும் வெற்றிகளைப் புகழ்ந்து இந்த நாட்டுப் புலவர் கூட்டம் பாடிக் குவித்துவரும் பாமாலைகள் எவ்வளவு என்பதை இவன் அறிவானு!

என்னவோ "அல்லலாம்! அறிவாம்! பல்லக்காம்!" யாருக்குப் புரியாது இவனுடைய விஷமத்தனம்.

பொருமை—முற்றும் பொருமை!

என் கட்சியடைந்துவரும் வெற்றி!

சிறப்பாக சென்னை நகராட்சிப் பீடத்தை எங்கள் 'அரசு' பிடித்து ஆள ஆரம்பித்திருப்பது கண்டு ஆத்திரம்!

அந்த ஆத்திரத்தைப் பாட்டிலே வடித்துப் பழிக்கிருன்! படிப்பேனு மேலே - இவன் கடிதத்தை என்று பதருதீர்கள். தங்களுக்குக்கடிதம் எழுதவேண்டியதை அடியோடு மறந்து ஏதோ சித்தர் பாடல்களைப் புரட்டிக் கொண்டிருந்தவன்; திடீரென்று தங்கள் நினைவு வரப் பெற்றவனு[illegible] எழுத ஆரம்பிக்கவே யாரோ ஒரு சித்தர் - தங்[illegible] மீது அவருக்கு வெகு பிரியம் போலும்! கடி[illegible] தங்களுக்குத்தான் என்றதும்மேலேஏறி உட்கார்[illegible] கொண்டு நகரவே மறுத்துவிட்டார்!

நான் எவ்வளவோ எடுத்துச் சொன்[illegible] தங்கள் பண்பைப் பற்றி!

அவசியமும் தேவையுமான ஆட்களை[illegible] தாங்கள் சந்திப்பதற்கு ஏகப்பட்ட கிராக்கி செ[illegible] வீர்கள்; அனுவசியமான ஆட்கள் என்ருல் அறவே ஒதுக்கித் தள்ளிவிடுவீர்கள்! என்று. அதிலும் அந்த நாளிலிருந்தே - அதாவது "அய்யா"வின் பின்னுலே அழுக்குடையோடு ஊர் சுற்றிய கா[illegible] லிருந்தே 'அறிஞர்' இப்படி ஒரு பழக்கத்தை கண்டிப்பாகக் கைக்கொண்டு வருபவர். —

இந்த நாளில் சொல்ல வேண்டு[illegible] அக்ரகாரத்து அறிஞர்களும் (?) அரிவையர்[illegible] புடைசூழ ஆரோகணித்து எந்நேரமும் அர[illegible] சர்ச்சையில் (?) ஈடுபட்டிருக்கும் எமதண்ணல்[illegible] இளித்தவாய் சித்தரே, உம்மை ஒரு சிட்[illegible] பொடிக்குக் கூட மதிக்கமாட்டார் ஐயா!

உம்மைப் பார்த்ததுமே நீர் எதிலே வந்தவர் - காரிலா, கால் நடையாகவா என்று கவனிக்கும் 'கண்ணிய'மிக்கவராயிற்றே எமது அறிஞர். உமக்கிருக்கும் செல்வத்தையும் அதிலே அண்ணலுக்காகச்செலவு செய்யநீர்ஒதுக்கிவைத்திருக்கும்கணிசமான பகுதியையும் கட்டியங்கூறும் முன்னேடுந் தம்பிமார்கள் மூலமாக முன்னதாகவே அறிந்து கொண்ட பின்வரல்லவர் எமது 'அறிவரசர்' உம்மோடு பேசவே துணிவு கொள்வார்!

நீர் என்ன திருச்சி போலி வைர வியாபாரியா? அல்லது புட்டாசாமியா - சங்கரனு - லிங்கமா அல்லது ராமனு? யாரையா நீர்? எவ்வளவு சொன்னுலும் கேட்காது இடித்துவைத்த புளிபோல மேலே ஏறி உட்கார்ந்து கொண்டீரே! என்று எவ்வளவோ சொன்னேன் கேட்டால்தானே!

ஆகவே இனிமேல் அவர்பாடு உங்கள் பாடு என்னை விட்டு விடுங்கள்!

நான் சென்ற வாரம் எழுதியதையே தொடர்கிறேன்.

உங்கள் புதிய பாணிக்கேற்பத் தம்பிமார்களும் இப்போது தியாகராய பசனையில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்கள் அல்லவா! தத்தமது பத்திரிகைகளிலே! தியாகராயர் புகழ் பாடுவதும், வாழ்க்கை வரலாறு வெளியிடுவதும் – கவிதை புனைவதும் ...வர் கால்வழி தோன்றியவர்களே தாங்கள் எனக்...டிக்கொள்வதிலும் தம்பிமார்கள் எல்லோரும் ...போது போட்டி போட்டுக் கொண்டிருக்...ர்கள்!

...போடட்டும்!

...அண்ணு எவ்வழியோ

...தம்பிகள் அவ்வழி!

நாளைக்கே தாங்கள் திடீரென்று ஒரு பல்டி ...டித்து நாமெல்லோரும் ராமலிங்கசாமியின் குஞ்சு...ள் என்ருல் - உடனே ஆமாஞ்சாமி போடத் ...வறமாட்டார்கள் உங்கள் அருமைத் தம்பிகள்!

...வளரட்டும் தம்பிமார்களின் அன்பு!

...பெருகட்டும் அண்ணுவின் பாசம் (வேசம் என்று ...கப் படித்துவிடாதீர்கள்!)

...மாம் அறிவரசே!

...தங்களுக்கு நினைவு இருக்குமென்றே நினைக்...ர்.

தேசிய அவமதிப்புத் தடைச் சட்ட (அதாவது எங்கள் சட்ட எரிப்புப் போருக்கு எதிரான சட்டம்) மசோதா சென்னை சட்ட மன்றத்திலே விவாதிக்கப்பட்ட நேரத்திலே நீங்கள் ஆட்சியாளருக்கு எதிராகவும் - முந்நாள் தந்தைக்கு (உங்கள் பாணியில்) ஆதரவாகவும் பேசிய பேச்சும் அது கண்டு ஆத்திரங்கொண்ட அமைச்சர் சுப்ரமண்யம் தங்களையும் தங்கள் தம்பிகளையும் ஒரு சேரச் சேர்த்து ஆங்கிலேயனின் அடிவருடிகள் என்றும் புதைக்கப்பட்ட, நீதிக்கட்சியின் சமாதிக் குழுவிலே புழுத்து நெளியும் புழுக்களென்றும் தாக்கியபோது,

சட்டமன்றில் பதில் கூற வாய்ப்பில்லாத காரணத்தால் சைதாப்பேட்டைப் பொதுக்கூட்டத்தில் பேசினீர்களே நினைவிலிருக்கிறதா?

''நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசுகளே அல்ல - சுயமரியாதைவீரர் பெரியார் ராமசாமியின் சீடர்கள் - எனது தம்பிகள் நெடுஞ்செழியனே கருணுநிதியோ - நடராசனே நீதிக்கட்சியில் சம்பளம் பெற்றவர்கள் அல்ல! (அப்படியென்ருல் பெரியாரிடம் சம்பளத்துக்கு வேலை பார்த்தவர்கள் என்ற பொருளில்)

அப்படியே எங்களுக்கும் நீதிக்கட்சிக்கும் ஏதாவது தொடர்பிருந்தாலுங்கூட! (உங்களுக்குஉண்டு) அந்த நாளில் உறவு இருந்தாலுங்கூட!

அந்தக் கட்சியின் தலைவர்களை நாங்கள்போற்றி இருந்தாலுங்கூட அவர்கள் வேறு, நாங்கள் வேறு! நீதிக்கட்சியின் சாரத்திலிருந்தே நாங்கள் வடித்தெடுக்கப்பட்டிருந்தாலுங்கூட!

எங்கள் மார்க்கம் வேறு, அவர்கள் போக்கு வேறு!

(அதாவது அவர்கள் ஆங்கிலேயர்களின் பாதந் தாங்கிகள், பதவி விரும்பிகள், பட்டந்தேடிகள் - படாடோபக்காரர்கள்–நாங்கள் பகுத்தறிவு வாதிகள் பட்டமும் படாடோபமும் அற்றவர்கள் என்ற பொருளில்)

என்று பொழிந்து கொட்டிய நீங்கள்–அத்தோடு நிறுத்திக் கொண்டிருந்தீர்களானுல் அந்தச் சொற்பொழிவை ஒருபொருட்டாக இங்கே நான் எடுத்துக் காட்ட வரமாட்டேன்!

தாங்கள் உதாராண வீரராயிற்றே. உவமானமில்லாது எதையுமே விளக்குவது அவமானமாயிற்றே தங்களுக்கு; எனவே நீதிக்கட்சியையும் தங்களையும் உவமான உவமேயங்களிலே வைத்து

அன்று விளக்கிக் காட்டினீர்கள். அந்த ஒலியலைகள் இன்னமும் என் செவிகளிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

சேற்றிலே பிறந்த செந்தாமரை நாங்கள்!

சேறு – நீதிக்கட்சி

செந்தாமரை – தி. மு. க.

இது சாதாரண உவமானம். சாதாரணங்கள் அடிக்கடி கையாள்வது! அறிவரசர் தரத்துக்கு அவ்வளவாக ஒவ்வாதது.

கருப்பை!

மலக்குழல்!

இது அறிஞர் தரத்துக்கேற்றது! மலக்குழிக்கு அருகிலேதான் கருப்பையும் இருக்கிறது, அதனல் கருப்பையிலே பிறந்துவரும் சிசுவை -மலச்சேர்க்கையுடையது என்று உதறிவிடுவோமா?

அதுபோலத்தான் நீதிக்கட்சிக்கும் எங்களுக்கும் அந்த நாளில் உள்ள தொடர்பு!

(தாங்கள் நீதிக்கட்சித் தலைவர் ஒருவர் இடத்தில் சம்பளத்துக்கு வேலை பார்த்த காரணத்தால் – அதை மறைக்க விரும்பவில்லை.)

எனவே நீதிக்கட்சி இழிவுடையது-மலக்குழல்!
தங்கள் இயக்கம் கருக்குழியிலிருந்து வந்த சிசு! எனவே! உயர்வுடையது!

அழகாக விளக்கிவிட்டீர்கள்! தமிழர் சமுதாயத்துக்கு முதன்முதல் அறிவுப்பாதையைக் காட்டியதாக இன்று நீங்கள் கூறும் தியாகராயரால் தோற்றுவிக்கப்பட்ட நீதிக்கட்சி

'மலக்குழல்'

நாயரும் – பனகலும் – பொப்பிலியும் – உழைப்பையும் பொருளையும் – வாரிக்கொட்டிப் போற்றி வளர்த்த நீதிக்கட்சி – மலக்குழல்.

பெரியார் ராமசாமி தமிழகத்தில் ஏற்படுத்தி வைத்திருந்த பார்ப்பன பனியா எதிர்ப்பு உணர்ச்சியைப் பல்வேறு வகையிலும் - முறையிலும் ரூபா பைசாவாக்க முயன்று அவர் தலைமைக்குள் அது நடக்காது எனக்கண்டு, ஏதோ அந்த நேரத்துக்கேற்ப ஒரு கீழ்த்தரமான காரணத்தைச் சொல்லிவிட்டுப் பண ஆசை பக்தர்களுக்குத் தூபம் போட்டுப் பிரித்துக்கொண்டுவந்து இந்தப் பத்து ஆண்டில் முடிந்த அளவுக்கு அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் உங்கள் கூட்டம்.

கருப்பையிலே கிடக்கும் சிசு!

அதாவது மிகவும் உயர்வானது!

ஒரே ஆண்டுக்குள் எப்படியண்ணுத்தே உங்கள் கருத்தைத் தலைகீழாக மாற்றிக்கொண்டு விட்டீர்கள்!

"கருத்துக்களை மாற்றிக் கொள்ள ஆண்டுளதற்கடா மடையா அரை நாழிகை போதாதா! அதிலும் அறிஞனயிற்றேடா நான், அரைநொடியில் ஆயிரம் புதுக்கருத்துக்களை உதிர்ப்பேன் - பழையனவற்றை மாற்றுவேன்! புரட்டுவேன்! திருத்துவேன்! மறுப்பேன்!" என்பீர்கள்!

என்ன சொல்வது

தமிழ்நாடு அடைந்தபேறு! தங்களைப்போன்ற பேரறிஞர்கள் எல்லாம் இங்கே பிறந்துஉள்ளீர்கள்!

அரசியலிலும் ஈடுபட்டு இப்படி அசகாயசூ[illegible]தனம் செய்கிறீர்கள்!

அன்று! பெரியார் போர்க்களத்திலே நின் [illegible] பொருதார், சிறை பிடிக்கப்பட்டார்!

அவரது சீடர்கள் ஆயிரமாயிரமாகச் கோட்டம் புகுந்தார்கள் – உயிர் கொடுத்த[illegible] சித்ரவதைக்குள்ளானுர்கள்!

அப்போது உங்கள் வாய்அதற்கேற்பப் பு[illegible] பேசி – உங்கள் கூட்டத்தை வளர்த்தது!

இப்போது கறுஞ்சட்டைப் பாசறையி[illegible] வளவாகப் போர்மேகமில்லை!

உங்கள் கூட்டத்தின் கணக்கேட்டிலே [illegible] லாபம் காட்சி தருகிறது – சென்னை நக[illegible] வெற்றிக் கண்ணை மறைக்கிறது. இந்த நில[illegible] பெரியாருடைய தயவும் கறுஞ்சட்டைகளுடை[illegible] ஆதரவும் தேவையில்லை...

(சென்னையில் கறுஞ்சட்டையணிந்தும் [illegible] பாடில்லாத சில 'பெரிய மனிதர்கள்' பல[illegible] களில் தங்கள் ஆட்களை ஆதரித்து வெற்றி[illegible] செய்துள்ளார்கள்)

இருந்தாலும் இப்போது அவர்கள் [illegible] களுக்கு எதற்கு? காரியம் ஆகும் வரை[illegible]

பிடிப்பதும் - பிறகு சிண்டைப் பிடிப்பதும்தான் தங்களது 'பண்பு' ஆயிற்றே!

ஆகவே இப்போது 'தியாகராயர்' புகழ்பாடும் படலம் ஆரம்பமாகி இருக்கிறது!

ஆமாம்! நான் தெரியாமல் கேட்கிறேன்: இப்படி அடிக்கடி அடியோடு உங்கள் கருத்துக்களையும் எண்ணங்களையும் தலைகீழாக மாற்றிக் கொள்கிறீர்களே - அப்போதெல்லாம் உங்கள் இதயம்! என்ன செய்கிறது? மனசாட்சி என்ன சொல்கிறது? "மனமாவது சாட்சியாவது! மூடா! அவைகளையெல்லாம் பொருட்படுத்தி இருந்தால் நான் இந்நேரம் எங்கே இருப்பேனோ எப்படி இருப்பேனோ!" என்கிறீர்களா!

நல்லது, சென்னை வெற்றிப்போதை இந்நேரம் தெளிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

போதையோடு தஞ்சையிலே பேசும்போது தந்தை பெரியாரை – காங்கிரசின் ஆதரவாளர் என்று தாக்கியதைப்போலத் தாக்க வேண்டாம்!

ங்களைப் போன்று அவர் ஏமாற்றி எந்தக் தையும் எந்த நாளிலும் செய்ததில்லை செய்ய ருர். தேவையுமில்லை...

ஞ்சிறப்புமாக வாழ்ந்த ஒரு சமுதாயம் ிட்டது. அதைப் பழைய நிலைக்குக்கொண்டு ண்டுமானல்,

ந்தச் சமுதாயத்தை–அதாவது 'மக்களை' முத க்களாக' ஆக்கவேண்டும். அந்தப் பெரும் ல் ஈடுபட்டிருக்கிருர்; பெரியார்.

ங்களும் உங்கள் கூட்டமும் ஏதாவது ஒரு பிடித்துக்கொண்டால் பிறகு சமுதாயம் டும் என்று சொல்கிறீர்கள்!

னவே மக்களைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப் து.– உங்கள் ஆட்சி பிடிக்கும் வேலைக்கேற்ப க்கேற்பச் சமத்துக் கேற்பப் பேசியும் நடித்தும் மாடி வருகிறீர்கள்!

கயும் நாடகமும்" சில சமயங்களில் உண்மை தோன்றுவதுண்டு - பார்ப்பவர்கள் மயங்கு ண்டு.

கத்திலே, நாடகத்திலே வரும் பிச்சைக் ண்மைப் பிச்சைக்காரன் என்று கருதிக் து மேடையை நோக்கி வீசும் பலரை ருக்கலாம்.

அதே நிலைதான் இன்று! தங்களுக்குக் கிடைத் திருக்கும் மக்கள் ஆதரவு - வெறும் மயக்கம்!

–பார்ப்பவர் நாடகமாடியின் வேடங்கண்டு மயங்கிக் காசைப்போடுவது தவறில்லை–மயங்குவதும் இயற்கை- ஆனால் நாடகமாடிக்கு நினைவு நன்ருக இருக்கவேண்டும். இந்த நடிப்பெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்துக்குத்தானே என்று. !

நாடக அரசன்! மேடையிலிருந்து இறங்கி மந்திரீ! நமது அரண்மனைக்கு வழிகாட்டு-ராணிமார் கள் எங்கே? மஞ்சம் எங்கே? மதுரசம் எங்கே? என்று புறப்பட்டுவிட்டால் யாரும் மதுரசமும் தர மாட்டார்கள் அதிரசமும் தரமாட்டார்கள் உதை தான் விழும்!

ஆனல் அதே வசனங்களை மேடையிலே சொன்னல் 'அப்ளாஸ்கள்' (applause) விழும்!

ஆகவே உங்கள் நகரசபை வெற்றியை அதே முறையில் (ஓட்டுக்காக எதையும் சொல்வது) பெருக்கி –மந்திரிசபை அமைக்கப்பாடுபடுங்கள்!

பாவம், இப்போது சென்னைமேயருக்குப்போர்த்திய (கடற்கரைக் கூட்டத்தில்) காசுமீரச்சால்வையைத் தொட்டுத்தொட்டுத்தொட்டு நீங்கள் பார்க்க– இதேதடா வம்பு என்று அவர் அதைததூக்கித்தங்கள் மீது போட்டு விட்டுச் சனியன் தொலையட்டும் என்றிருக்க இந்த நிலைமைகள் எல்லாம் அப்போது நேராது!

சென்னை முதல்மந்திரி அண்ணுதுரைக்குக் காசுமீரத்து முதல்மந்திரி பக்ஷி "குலாமோ" - அல்லது அப்போது பதவிக்கு வரும் பண்டித நேருவின் வேறு 'குலாமோ' அருமையான காசுமீரச் சால்வையைப் போர்த்தி–அழகு ஒடையாம் 'தால்லேக்'கில் ஏற்றி - சிரீநகரத்துச் சிங்காரிகளைப் பாடவிட்டுத் –தனித்திருந்து உரையாடுவார்!

அப்போது அவரும் நீங்களும் பேசலாம்!

இந்தியாவை உபகண்டம் என்று சில உலுத்தர்கள் பேசுகிருர்கள் உதைக்க வேண்டும் அவர்களை.

இது ஒரே நாடு!

இதன் முடி நீங்கள்!

அடி நான்!

ஆனல் இப்போது அடியிலும் முடியிலும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

அங்கே ஒரு 'அப்துல்லா'

இங்கே ஒரு 'ராமசாமி'

இருவரும் கமது எஜமான் நேருபெருமகனாரின் ஏக இந்தியத் தத்துவத்தை உடைத்துத் தள்ளித் தனிக் காசுமீரமும், தனித்தமிழகமும் சுதந்திரக் குடியரசுகளாகத் திகழப் பாடுபடுகிறார்கள்...!

ஒருவர் இப்போது உள்ளே இருக்கிறார். உங்கள் சேவையால் அடுத்தவர் வெளியேஇருக்கிறார். அடியேன் போனதும் அவரை அரசாங்க விருந்தாளியாக்குகிறேன்,

பாரத் மாதாகீ ஜே!

பண்டிட் நேரூகீ ஜே!

என்று முழங்கலாம் பின்னர் மதிமுக விலாச மடந்தையர்களோடு முயங்கலாம்.

அந்த நாட்களை - உங்களைவிட நான் விரைவாக எதிர்பார்க்கிறேன்:

ஆகவே; பட்டமும் பதவியும் பவிசும் உங்களுக்கும் உங்கள் கூட்டத்திற்கும் தேவை - மேலும் தேவை!

- நாங்களோ காராக்கிரகத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பவர்கள். எங்களுக்கு அவைகள் எதற்கு? நாங்கள் அவைகளை விரும்பி உங்களோடு ஒரு நாளும் போட்டிக்கு வரமாட்டோம்!

கவலைப்படாதீர்கள்!

நாங்கள் அல்லலை எதிர்நோக்கி இருக்கிறோம்.

நீங்கள் அரியணையைப்பார்த்துக் கொட்டாவி விடுகிறீர்கள்!

நாங்கள் அறிவுக்கு முதலிடம் கொடுத்துப்போராடுகிறோம்!

நீங்கள் அதற்கு விடைகொடுத்துவிட்டுச் சீர்தேடுகிறீர்கள்!

எங்களுக்குப் பதவியோ - பல்லக்கோ தேவையில்லை...!

உங்களுக்கு இரண்டும் தேவை. இன்று ஏறினாலும் - நாளைத் தூக்கவேண்டும்!

எதை?

பல்லக்கை!

அப்போது அதில் யார் இருப்பார் நேரு துரை மகனார் இருப்பார்!

மன்னிக்க வேண்டும்...! இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்த சித்தர் இப்போது எனது எழுதுகோலைப் பிடித்துக்கொண்டு! அந்தப் பாடலை மறுபடியும் இங்கே எழுதச் சொல்கிறார்!

எனவே அடுத்தவாரம் நான் தொடர்ந்து பதவியா - சேவையா என்பதை எழுதுகிறேன்!

இப்போதைக்குச் சித்தரை மறுபடியும் கொஞ்சம் பாருங்கள்!

சுதந்திரநாடு பெறப் போராடும் வீரராயிற்றே நீங்கள்!

'அல்லலை நோக்கி அறிவோடிருப்போர்க்குப்
பல்லக்கு ஏதுக்கடி - குதம்பாய்
பல்லக்கு ஏதுக்கடி !

அன்புள்ள,
கறுஞ்சட்டை

தமிழ்

அகத்தியர்தாம் தமிழிற்கு வரிவடிவெழுத்துக்களை அமைத்தார் என்று சிலர் எண்ணிச் சொல்வதை நாம் கொள்வதற்கில்லை. அவருக்கு முந்தியே எழுத்து, சுவடி என்கிற காரணப்பெயர்கள் தமிழில் இருந்தன என்பது தெள்ளிதின் விளங்குகின்றது. ஆகையால், அகத்தியர்தாம் தமிழிற்கு வரிவடிவெழுத்துக்களை ஏற்படுத்தினர் என்பதை நாம் தள்ளுவதன்றி கொள்ளுவதற்கிடமில்லை!

- டாக்டர், வின்சுலோ.

தமிழின் நிலை

தமிழ் எந்த மொழிக்கும் இழிந்ததன்று. ஆனாலும், சிலர் அதை எங்கேயோ அங்கில அரசாட்சியின் அநாகரீகமான ஒரு இடத்தில் பேசும் மொழி என எண்ணுகிறார்கள். அன்றியும் அதை நமது அரசாள்வோரும் கலாசங்கத்தாரும் கொஞ்சமேனும் அருமையறிந்து போற்றுவதில்லை. ஆகையால் அதில் பயின்று புலமை நிரம்பப் பெ[illegible] படுகிறவர்கள் - கடலிற் குளித்து முத்தெடு[illegible] பாடுபட்டுச் சித்தம் திகைப்பவர் போலாகிறார்[illegible]

- டாக்டர் ஜி.[illegible]

தீண்டாமையும் சாதியொழிப்பும்

—திருச்சி இளங்கீரன்—

தீண்டாமையும், சாதியொழிப்பும் சிந்திக்க வேண்டிய இரு முக்கியமான பொருள்கள் ஆகும். தீண்டாமை ஒழிப்பு என்ற வார்த்தையை நினைத்தால் நமக்கு முன்பாகக் காந்தியார் தோன்றுகிறார். சாதியொழிப்பு என்றவார்த்தையை நினைத்தால் நம் முன் பெரியார் தோன்றுகிறார். தீண்டாமை ஒழிப்பு இயக்கம் அரசினர் ஆதரவோடு இந்தியா முழுவதிலும் நடத்தப் பட்டு வருகிறது. சாதியொழிப்புக்கு மக்களின் ஆதரவு, குறிப்பாக தமிழ்மக்கள் அந்த இயக்கத்துக்குத் தங்கள் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் கொடுத்து விடவும் ஆதரவு பெருகி இருக்கின்றது.

ஆகவே காந்தியத்துக்கும், பெரியாரிசத்திற்கும் அரசினருக்கும், தமிழர்களுக்கும் போர். சமுதாயத்துறையில் மாபெரும் போர். தீண்டாமையை ஒழிக்காவிட்டால் இந்துமதம் அழிந்து விடும் என்று தெரிந்துகொண்டு, இந்துமதத்தைக் காப்பாற்றுவதற்காக, சாதிமுறைகளையும் அழிந்துவிடாமல் காப்பாற்றுவதற்காக, ஆனால் சூத்திரர்கள் அதாவது தீண்டாதவர்கள் என்பவர்களுக்கு மட்டும் கண்துடைப்பு வேலையாகத் "தீண்டாமை ஒழிப்பு" என்ற சேவையைக் காந்தியார் செய்திருக்கையில், கேவலம் மதத்தையே நம்பாத சூத்திரர்கள் மேம்படவேண்டும் என்பதற்காகச் சாதியொழிப்பை மேற்கொண்டுள்ள பெரியாரின் தொண்டு சிறியதாகவே தோன்றக்கூடும்.

ஆனால், மனிதனுக்கு மனிதன் என்ன வேற்றுமை? அனைவரையும் கடவுள்தானே படைத்தார்? அப்படியானால் மனிதனுக்கு மனிதன் ஏன் வேற்றுமை? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் பெரியாரின் தொண்டே பெருந்தொண்டாகத் தோன்றும். ஆகவே, பெரியார் என்ற பெருஞ்சோதி மலைக்கு முன்னால், ஆசியஜோதி என்ற அகல்விளக்கு ஒளி குன்றிய விளக்காகவே தோன்றுகிறது!

இந்துமதம் மிகமிகப் பழமையன ஒரு மதம். கிறித்துவ மதத்திற்கும், இயேசுவிற்கும் தொடர்பு இருப்பதைக் காண்கின்றோம். அதுபோலவே இசுலாமிய மதத்திற்கும் முகம்மது நபிக்கும் தொடர்பும் இருப்பதைக் காண்கிறோம்! ஆனால் இந்து மதத்திற்கு யாருடைய தொடர்பும் கிடையாது. அதாவது இந்து மதத்தை இஸ்லாமவர்தாம் நிறுவியவர் என்று யாருக்கும் தெரியாது.

அப்படியானால் இந்து மதம் தோன்றிய வரலாறுதான் எப்படி? இந்து மதம் எப்போது யாரால் தோற்றுவிக்கப் பட்டது என்பது யாருக்கும் தெரியாது. காலத்திற்குக்காலம், அதாவது வேதகாலத்திலிருந்து புராண காலம் வரை, புராணகாலத்திலிருந்து யோகிகள், முனிவர்கள், ஞானிகள் காலம் வரை, அவர்கள் காலத்திலிருந்து ஆதிசங்கரர் காலம் வரை அவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவைகளை அப்படியே கூறிவிட்டுச் சென்றார்கள். இப்போது ராஜகோபாலாச்சாரியாரும், சங்கராச்சாரியாரும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

பிச்சைக்காரி

வித்துவான்-பா. முத்து, புதுவை

கையினில் மண்ணு லான
கலயமொன் றிருக்கும்; சோர்ந்த
மெய்யினில் அழுக்குச் சேலை
மேலெலாம் பொத்தல்; கூந்தல்
செய்யமண் நிறத்தை ஏற்றுச்
சிறுசிறு சடையாய்த் தொங்கும்;
வெய்யிலின் கொடுமை எல்லாம்
விளக்கிடும் அவளின் மேனி!

தடியூன்றி வீடு வீடாய்த்
தள்ளாடி வருவாள்; பிச்சை
மடியேந்தி வாங்கி வைப்பாள்;
மக்களைக் கெஞ்சிக் கூவிப்
பிடியேனும் கொடுப்பீர்; இந்தப்
பேதையைக் காப்பீர் என்பாள்;
அடுபசி அறியாச் செல்வர்
அடுத்தவீட் லடைப்பார் என்பர்!

கடைவீதி சுற்றிச் சுற்றிக்
காசுகள் கேட்பாள்; சிற்றூண்
கடையெதிர் மாலை வந்து
கையேந்தி நிற்பாள்; கந்தல்
உடையினைக் காட்டிக் கையால்
ஒட்டிய வயிற்றைக் காட்டி
"உடையோரே! உயர்ந்த மக்காள்
ஒருகாசு தருவீர்" என்பாள்

பிச்சையை ஏற்றல் அன்னாள்
பெரியதோர் அலுவல்; கொண்ட
இச்சையை மறுக்க இங்கோ
எவருக்கும் உரிமை இல்லை;
எச்சிலை அவளின் சொத்தாம்;
இரவினில் அயர்ந்து தூங்கப்
பச்செசன வாழ்வோர் வாயிற்
படிக்கட்டோ பட்டு மெத்தை!